RBI/2007-2008/364
UBD.CO.BPD.(PCB).No.51/09.39.000/2007-08

ஜூன் 12, 2008

தலைமை நிர்வாக அதிகாரிகள்
அனைத்து தொடக்க (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகள்

அன்புடையீர்

**பார்வை குறைபாடு உடையவருக்கு வங்கி வசதிகள் -
நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள்**

பார்வை குறைபாடு உடையவர்கள் வங்கி வசதிகளைப் பெறுவதில் சில பிரச்சனைகளை சந்திக்க நேரிடுவது ரிசர்வ் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகு வாடிக்கையாளர்கள் **சட்டரீதியாக உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள தகுதியுடையவர்கள்.** ஆதலால் காசோலை புத்தக வசதி / தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களை பயன்படுத்துதல் / பாதுகாப்பு பெட்டக வசதிகள் உட்பட வங்கி வசதிகளை இவர்களுக்கு அளிக்க மறுத்திட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

2. செயல்திறன் குறைபாடு உடையவர்களுக்கான மாண்புமிகு தலைமை ஆணையர் நீதிமன்றம் 2791/2003 எண்ணிடப்பட்ட வழக்கில் 05.09.2005 தேதியிட்ட ஆணைகளை (நகல் இணைக்கப்பட்டுள்ளது) பிறப்பித்துள்ளது. காசோலை புத்தக வசதி / தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களை பயன்படுத்துதல் / பாதுகாப்பு பெட்டக வசதிகள் உட்பட வங்கி வசதிகளை பார்வை குறைபாடு உடையவர்களுக்கு அளித்து அவர்கள் பணம் எடுக்கும்பொழுது உதவிட மாண்புமிகு நீதிமன்றம் வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. காசோலை புத்தக வசதி / தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களை பயன்படுத்துதல் / பாதுகாப்பு பெட்டக வசதிகள் ஆகியவற்றை பயன்படுத்தும்பொழுது ஏற்படக்கூடிய இடர்வரவினை கருத்தில்கொண்டு பார்வை குறைபாடு உடையவர்களுக்கு இத்தகு வசதிகளை மறுக்கக்கூடாது ஏனெனில் மற்ற வாடிக்கையாளர்கள் இவற்றை பயன்படுத்தும்பொழுதும் இடர்வரவு ஏற்பட வாய்ப்புண்டு என்று மாண்புமிகு நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட ஆணையின் பத்தி 14-ல் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஆகவே காசோலை புத்தக வசதிகள் (மூன்றாம் நபருக்கான காசோலைகள் உட்பட), தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களை பயன்படுத்துதல், இணையதள வங்கி வசதி, பாதுகாப்பு பெட்டக வசதிகள், சிறிய கடன் வசதிகள், கடன் அட்டைகள் போன்ற வங்கி வசதிகள் பார்வை குறைப்பாடு உடையவர்களுக்கு <u>எந்தவிதமான பாராபட்சமுமின்றி</u> அளிக்கப்படுவதை வங்கிகள் உறுதிசெய்திடுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.** பார்வை குறைபாடு உடையவர்கள் பல்வேறு வங்கி வசதிகளை பெறுவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுமாறு வங்கிகள் தங்களின் கிளைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கலாம்.

தங்கள் உண்மையுள்ள

(A.K. Khound)
முதன்மைப் பொது மேலாளர்